தேதி : ஃபிப்ரவரி 03, 2014

# மூன்றாவது அணி மீண்டும் அமைந்துவிட்டதா?

**-அருண் ஜெய்ட்லி**

*எதிகட்சி தலைவர்(மாநிலங்களவை)*

மூன்றாவது அணி மீண்டு அமைந்துவிட்டதா? Third Front மூன்றாவது அணி என்ற யோசனையை முன்னெடுப்பவர் யார்? அதன் விளைவுகள் என்ன? மூன்றாவது அணி என்ற யோசனைக்குப் பின் இயங்கும் முக்கிய சக்திகள், ஐக்கிய் ஜனதா தளம் மற்றும் சமாஜ்வாதி கட்சிகள். . இந்த இரண்டு கட்சிகளுமே கடுமையான அடையாளச் சிக்கலை சந்தித்த்கெ◌ொண்டிருக்கின்றன . ஐக்கிய ஜனதா தளம், பாரதிய ஜனதா கட்சியுடனான நீண்ட காலம் நீடித்த கூட்டணியை முறித்துக்கொண்டு, மக்களவைத் தேர்தலில் தூக்கியெறியப்படும் சாத்தியத்தை எதிர்நோக்கியிருக்கிறது அக்கட்சி பிஹார் மாநிலத்துக்கு அப்பால் செயல்பட முடியாத நிலையில் இருக்கிறது. அதன் தலைவர்கள் சில துணிச்சலான முடிவுகளை எடுக்கத் தயாராக இருந்தார்கள். லாலு பிரசாத் யாதவ் சிறையில் அடைக்கப்படுவார், அதன் மூலம் சிறுபான்மையினர் வாக்குகள் தங்களுக்குக் கிடைத்துவிடும் என்று நம்பிக்கெ◌ொண்டிருந்தார்கள். . ஆனால் ராஷ்ட்ரீய ஜனதா தளக் கட்சி தலைவருக்கு வழங்கபட்ட பிணை விடுதலை, ஐக்கிய ஜ்னதா தளத்தின் கணக்குகளை முறியடித்துவிட்டது. ஐக்கிய முற்பெ◌ோக்கு கூட்டணி பத்தாண்டுகள் ஆட்சியில் இருப்பதற்கு காரணம் உத்தர பிரதேசத்தின் சமாஜ்வாதி கட்சிதான். அனைத்து நெருக்கடியான சூழ்நிலைகளிலும் அது ஐ.மு.கூவுக்கு உதவியது. . சமாஜ்வாதி கட்சியில் உயர் பதவிகளை வகிக்கும் தலைவர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு எதிரான ஊழல் வழக்குகளை சி.பி.ஐ மூலம் வலுவிழக்கச் செய்வதுதான் அதற்கு வழங்கப்பட்ட சன்மானம். காங்கிரஸ் எதிர்ப்பு நிலையில் நம்பத்தக்க அரசியல் ஆளுமையை உருவாக்குவது சமாஜ்வாதி கட்சிக்கு மிக மிகக் கடினமான செயல். .யாதவர்கள் மற்றும் இஸ்லாமியர்கள் ஆகிய இரண்டு வாக்கு வங்கிகளைச் சார்ந்தே அதன் அரசியல் உத்திகள் அமைந்திருக்கின்றன. . இதில் முதலாம் வாக்கு வங்கியில் ஒரு பகுதியினர் ஏற்கனவே நரேந்திர மெ◌ோடிக்கு வாக்களிக்கத் தெ◌ொடங்கிவிட்டார்கள். இரண்டாவது வாக்கு வங்கியினர் முஸாஃபர்நகர் கலவரங்களுக்குப் பிறகு மாயத் தெ◌ோற்றத்திலிருந்தும் முற்றிலும் மீண்டுவிட்டார்கள். . ஐக்கிய ஜனதா தளம் மற்றும் சமாஜ்வாதி ஆகிய இரண்டு கட்சிகளும் தங்கள் செல்வாக்கு மிக்க பகுதிகளிலேயே தெ◌ோற்றுப் பெ◌ோகும் சாத்தியத்தை எதிர்நெ◌ோக்கி இருக்கிறார்கள். . . தோற்கப் பெ◌ோகிறவர்கள் இணைந்து கூட்டணி அமைத்துவிட்டால் மட்டும் வெற்றிபெற்றுவிட முடியாது.

காங்கிரஸ் மற்றும் பா.ஜ.கவிலிருந்து சம்மான அளவில் விலகியிருப்பதே மூன்றாவது அணிக்கான முக்கியமான தேவை. . ஐக்கிய ஜனதா தளமும் சமாஜ்வாதி கட்சியும் தங்களுக்கு அந்தத் தகுதி இருப்பதாக எப்படி செ◌ொல்லிக்கெ◌ொள்ள முடியும்? காங்கிரஸுடன் நட்பை ஏற்படுத்திக்கொள்ளும் பெ◌ோட்டியில் ஐக்கிய ஜனதா தளம் ராஷ்ட்ரீய ஜனதா தளத்திடம் தெ◌ோற்றது. ச்மாஜ்வாதி கட்சி ஐ.மு.கூவை பத்தாண்டுகளுக்கு பதவியில் நீடிக்க வைத்தது.

அப்புறம் சில மாநிலங்களில் இயங்கும் மாநிலக் கட்சிகள் இருக்க்வே இருக்கின்றன. கட்சிகள் அவற்றுக்கே உரிய ஆதரவு தளத்தைக் கெ◌ொண்டிருக்கின்றன . அவை இயங்கு மாநிலங்களுக்குள் இந்தக் கட்சிகள் பெ◌ொருட்படுத்ததக்க எண்ணிக்கையிலான மக்களவை தொகுதிகளை வெல்வதற்கான சாத்தியங்கள் இருக்கின்றன.இவை காங்கிரஸ் அல்லாத வெளியில் இயங்குகின்றன. அவை முன்னெ◌ொரு காலத்தில் தேசிய ஜனநாயக கூட்டணியுடன் அடையாளப்படுத்தப்பட்டன. அவற்றின் அரசியல் காங்கிரஸின் அரசியலுடன் இணையவே முடியாது.அவர்களின் அரசியல அடையாளத்தை அது நீர்த்துப் பெ◌ோகச் செய்துவிடும் காங்கிரஸ் கட்சி எந்த வகையிலும் ஒரு நம்பத்தக்க அரசியல் கூட்டணிக்குத் தலைமை தாங்கும் வாய்ப்பை நோக்கிச் சென்றுகெ◌ொண்டிருப்பதாகத் தெரியவில்லை. அதிகபட்சம் கூட்டணியின் விளிம்புநிலையில் இயங்கலாமே தவிர முக்கியப் பங்கு வகிக்க முடியாது.

மூன்றாவது அணியில் பின்வரும் முரண்பாடுகள் இருக்கின்றன – த்ருணமூல் காங்கிரஸும் இடதுசாரிகளுக்கும் இடையில் முரண்பாடு, சமாஜ்வாதி கட்சிக்கும் பகுஜன் சமாஜ் கட்சிக்கும் இடையிலான முரண்பாடு, அ.இ.அ.தி.மு.கவுக்கும் தி.மு.கவுக்கும் இடையிலான முரண்பாடு மற்றும் ஐக்கிய ஜனதா தளத்துக்கு ராஷ்ட்ரீய ஜனதா தளத்துக்கும் இடையிலான முரண்பாடு. இந்த முரண்பாடுகள் மூன்றாவது அணியால் தீர்க்க முடியாத அரசியல் முரண்பாட்டுக்கு வழிவகுக்கின்றன.. மூன்றாவது அணிக்கு கெ◌ொள்கை சார்ந்த ஒற்றுமை இல்லை கூட்டணியின்

நிலைத்தன்மையை உறுதிப்படுத்தத் தேவையான தேசிய அளவிலான அரசியல் செல்வாக்குடன் கூடிய .மையக் கரு அதற்கு இல்லை.

காங்கிரஸால் தலைமை தாங்கப்படும் ஐ.மு.கூவைப் பற்றிய மாயத் தோற்றம் விலகியிருப்பது வெளிப்படையாகத் தெரிகிறது. இப்போது நம் பொருளாதாரத்தில் ஏற்பட்டிருக்கும் குளறுபடியிலிருந்து நாட்டைக் காப்பாற்ற கருத்தொற்றுமை, .தீர்மானிக்கும் ஆற்றல் மற்றும் நிலைத்தன்மை ஆகியவை அவசியம். மூன்றாவது அணி இவற்றின் நேரெதிரான தன்மைகளைக் கொண்டிருக்கிறது . மூன்றாவது அணி குறித்த குரல்களை நாம் எந்த அளவுக்கு கேட்கிறோமோ அந்த நரேந்திர மோடியால் தலைமை தாங்கப்படும் தேசிய ஜனநாயக கூட்டணியின் அரசு அமைவதற்கான ஆசை அதிகரிக்கும். ஏனெனில் அந்தக் கூட்டணிதான், அரசமைப்பதற்கான வலிமையை தன்னளவிலேயே கொண்டிருக்கிறது.

ôôôôô